REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: மார்கழி 15உ திங்கள் (30—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 16உ செவ்வாய் (31—12—57) [இதழ் 170

'தனி காலனி அமைப்பது தக்க பரிகாரமல்ல'

ஐதராபாத், டிச. 30—

இங்குள்ள ஜவகர் தாழ்த்தப்பட்டோர் காலனியில் பேசுகையில், மக்கள்சபைத் தலைவர் திரு. எம். அனந்தசயனம் அவர்கள், "தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிச் சலுகைகள் வழங்கவேண்டியது அவசியம்; ஆனால், அவர்களுக்கு மட்டும் தனியாகக் காலனிகளையும், விடுதிகளையும் அமைப்பது தவறாகும்; அதனால் வேற்றுமைகள் நீடிக்கும்; மற்றவர்களுடன் அவர்கள் கலந்து பழகுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்; அதற்காக, ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்திற்கு சாதி இந்துக்களை தாழ்த்தப்பட்டோர் விடுதிகளில் சேர்க்கவேண்டும்; தீண்டாமையை ஒழிக்க இந்தவழி உதவிபுரியும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் நேருவுக்குக் கருப்புக் கொடி

பிற இடங்களில் கண்டன ஊர்வலம், பொதுக்கூட்டம்

தி. மு. கழகப் பொதுக் குழுவின் ஒருமுக முடிவு

(டிரங்க் டெலிபோன் மூலம்)

நாகர்கோவில், டிச. 29—

நேரு பண்டிதர், தமிழர்களையும், தமிழ்நாட்டின் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் தலைவர்களையும் கேவலமாகப் பேசிவருவதைக் கண்டிக்கும் வகையில் தமிழர்களின் அருவருப்பைக் காட்ட, வரும் ஜனவரி முதல் வாரம் நேரு பண்டிதர் சென்னை வரும்போது அவருக்குக் கருப்புக் கொடி காட்டுவது என்றும், அந்த நிகழ்ச்சியினை சென்னை சட்டமன்றத்தில் உள்ள தி. மு. கழக உறுப்பினர் பதினைந்து பேர்களும், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் முன்னின்று நடத்துவது என்றும், இப்பொதுக்குழு ஒருமுகமாகத் தீர்மானிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் மற்றும் தென்னகத்தின் தன்மானத்தில் அக்கறை கொண்டவர்களும் அந்தக் கண்டன நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு இப்பொதுக் குழு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறது.

அதே நாளில், சென்னை தவிர பிற மாவட்டங்களில் கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் கண்டன ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடத்துமாறு இப்பொதுக்குழு வேண்டிக்கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானம் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் 29—12—57 ஞாயிறு அன்று நாகர்கோவிலில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது ஒருமுகமாக நிறைவேற்றப்பட்டது.

★

போதனு மொழியாகவும் இந்தி புகுத்தப்படும்?

'ஆங்கிலத்தின் இடம் இந்திக்கே'

'பண்டிதர் கண்டிப்பு

ஐதராபாத், டிச. 29—

"ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டுவரும் எல்லாத் துறைகளிலும் படிப்படியாக இந்திதான் உபயோகிக்கப்படும் என்பதை இந்த நாட்டவர் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன்"—என்று, பண்டித நேரு திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

இங்கு நடைபெறும் அகில இந்திய ஆங்கில ஆசிரியர்கள் மாநாட்டிற்கு அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி ஒன்றில், மேற்கண்டவாறு கூறியிருப்பது, கல்வித் துறையிலும்கூட போதனு மொழியாக இந்தி கொண்டுவரப்படும் என்ற சூசகத்தையும் உள்ளடக்கியிருப்பதாக மாநாட்டு வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

இந்தி, படிப்படியாக எல்லாத் துறைகளையும் பிடித்துக்கொள்ளும் என்றாலும், 'உலகில் பரவலாக உபயோகிக்கப்பட்டுவரும் ஆங்கிலத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும்' என்றும் பண்டிதர் செய்தியில் கூறியிருக்கிறாராம்!

இந்திதான் ஆட்சிமொழியாம்

ஆங்கிலம் நீடிக்க முடியாதாம்

பண்டிதர் தெளிவாகக் கூறுகிறார்

கௌஹாத்தி, டிச. 29—

"அரசாங்கக் காரியங்களை நடத்திச் செல்ல, ஆங்கிலத்திற்குப் பதிலாக ஒரு இந்திய மொழியை வைத்துக்கொள்வதே விரும்பத்தக்கது; அத்தகைய இந்திய மொழியாக, இந்திதான் இருக்க முடியும்.

"இந்தியாவைப்போன்ற ஒரு பெரிய தேசம், தனது உள்நாட்டு வெளிநாட்டு அரசாங்கக் காரியங்களைக் கவனிக்க ஒரு அன்னிய மொழியை நம்பிக்கொண்டிருக்க முடியாது"

என்று, தெளிவாக, ஆட்சி மொழி பற்றிய தனது கருத்தைப் பண்டித நேரு, இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் வெளியிட்டிருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

கைத்தறி நெசவாளர் மாநாடு

திருச்சியில் கூட்டுவதென முடிவு

"கைத்தறி நெசவாளரின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணவும், கைத்தறித் துணிகளுக்குத் தரப்பட்டுவரும் 'ரிபேட்' தொகையைக் கண்டிக்கவுமாக, கழகத்தின் சார்பில், திருச்சியில் கைத்தறி நெசவாளர் மாநாடு ஒன்றினை நடத்துவது என இப்போதுக் குழு முடிவு செய்கிறது"

என்ற ஒரு தீர்மானமும், நாகர்கோவிலில் 29-12-57 அன்று நடைபெற்ற, தி. மு. கழகப் பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

வடஇந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்களில் தென்னாட்டு மொழிகளை ஆராய்ச்சி செய்வதற்கும், கற்பிப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம் என்று பாரத இந்தி பரீஷத் வற்புறுத்தியுள்ளது.

இந்தித் திணிப்பை எதிர்த்து இறுதிவரை போராடத் தயாராவீர்

தென்னக மக்களுக்கு தி.மு. கழகப் பொதுக்குழு வேண்டுகோள்

"1965-ம் ஆண்டுக்குள் இந்தியை ஆட்சி மொழியாக்கிவிட முயற்சிக்கும் டெல்லி ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்து தென்னகத்தில் உள்ள எல்லாத் தலைவர்களும், சென்னை அரசியலாரும் திட்டவட்டமான கண்டனத்தைத் தெரிவித்திருந்தும், அவற்றை அலட்சியப்படுத்திவிட்டு, டெல்லி ஆட்சியாளரின் இந்தியைத் திணிக்கும் முயற்சிகளைக் கண்டிப்பதுடன், அந்த முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுமானுல், அதைத் தடுத்து நிறுத்த இறுதிவரை போராடத் தயாராகுமாறு தென்னக மக்களை இப்போதுக் குழு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறது"

என்ற தீர்மானம், நாகர்கோவிலில் 29—12—57 அன்று நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் குழுவில் ஒருமுகமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

★★

'பெரியார் அவர்களை விடுதலை செய்க'

நாஞ்சில் மாநாட்டுக் கோரிக்கை

சிறையிலடைக்கப்பட்டிருக்கும் பெரியார் அவர்களையும், மற்ற தொண்டர்களையும், நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறும்;

நேரு பண்டிதரின் போக்கைக் கண்டிக்கும்வகையில், அவர் ஜனவரி முதல் வாரம் சென்னை வரும்போது கருப்புக்கொடி காட்டுவது என்றும், அதனை தி. மு. கழக சட்டசபை, பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னின்று நடத்துவது என்றும்;

அந்தந்த மாநிலங்களில் தாய் மொழி ஆட்சி மொழியாகவும், தொடர்பு மொழியாக ஆங்கிலமும் இருத்தல் வேண்டும் என்றும்;

இதற்கு மாருக, இந்தியப் பேரரசு இந்தியைத் திணித்தால் அதைத் தடுத்து நிறுத்த இறுதிப் போராட்டத்திற்குத் தயாராகுமாறு தென்னக மக்களை கேட்டுக் கொள்வது என்றும்;

இதற்குப் பொதுச்செயலாளர் அவர்கள் அனுமதி தரவேண்டும் என்றும்;

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாட்டில் அண்ணு அவர்கள் தீர்மானம் கொண்டு வந்தார்கள்.

அதனைத் தோழர்கள், என். வி. நடராசன், ஏ. கோவிந்தசாமி எம் எல்.ஏ., வழக்கறிஞர் வி. பி. இராமன், இரா. செழியன் ஆகியோர் வழிமொழிந்தனர்.

தீர்மானம் பெரும் கைதட்டுதலுக்கிடையேயும், ஆரவாரப் பேரொலிக்கிடையேயும் ஒருமுகமாக நிறைவேறியது.

பிற விவரங்கள் பின்னர் வெளிவரும்.

★★

நம் நாடு

சென்னை 30—12—57 திங்கள்

தேசாய் கொக்கரிப்பு!

"முதல் முறையாக நாம் ஒரு அரசாங்கத்தைப் பெற்றிருக்கிறோம்.

"பிரிவினையைக் கோருகின்றவர்கள் இந்த நாட்டில் இருந்து வருகின்றனர்.

"பிரிவினை ஏற்பட்டால் அதனால் விளையக்கூடியதுஎன்ன?

"நாடு மீண்டும் சிதறிப்போகும்—இழந்துபட நேரிடும்.

"இத்தகைய பிரிவினை முயற்சிகளை மக்களே வெறுத்து ஒதுக்கவேண்டும்."

மேலே குறிப்பிட்டிருப்பது போல், பேரரசின் வர்த்தக—தொழில் அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள், தமிழ் மக்களுக்குத் தாம் வீற்றிருக்கும் பதவியின் தன்மையை தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

இந்தியத் துணைக்கண்டம் ஒரே ஆட்சியின்கீழ் இப்பொழுதுதான் முதல் முறையாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற வரலாற்று உண்மையை அமைச்சர் தேசாய் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறு அவர் கூறுவதிலிருந்தே, இதற்குமுன் இந்தியத் துணைகண்டம் முழுதும் கோலோச்சிய ஒரே ஆட்சி இல்லை என்பது தெளிவாகிறது.

இந்த ஒரே ஆட்சி எப்பொழுது ஏற்பட்டது? ஆங்கில ஏகாதிபத்தியக் காலத்தில்தான் இந்த ஒரே ஆட்சியின்கீழ் இந்தியத் துணைக்கண்டம் இணைக்கப்பட்டது என்பதை அனைவரும் அறிவர்.

இந்த ஒரே ஆட்சி அமைப்பை மக்கள் ஒப்புதலுடன் ஆங்கில ஏகாதிபத்தியம் ஏற்படுத்தவில்லை. அச்சுறுத்தியும், ஆசை காட்டியும், பிளவுபடுத்தியும், பேதமூட்டியும், போர் தொடுத்தும், இந்த ஒரே ஆட்சி அமைப்பை ஏகாதிபத்தியம் உருவாக்கியது.

இந்தியத் துணைக்கண்டம் இந்தியா என அழைக்கப்பட்டு வந்ததே அல்லாது, 'இந்தியர்' என்ற பெயரிய மக்களைக் கொண்டதாக இருக்கவில்லை. பல்வேறு மொழியினரை, பல்வேறு கலாச்சாரம் கொண்டவர்களை, பல்வேறு வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுகிறவர்களைக் கொண்ட ஒரு துணைக்கண்டமாக இந்தியா இருந்து வந்தது. இன்றுள்ள நிலையும இதுதான்.

ஆங்கில ஏகாதிபத்தியம் வெளியேறும் நிலை பிறந்ததும், தான் உணர்ந்துள்ளதும் பின்பற்றி வருவதுமான மக்களாட்சிக் கருத்துப்படி, பெரும்பான்மை முஸ்லிம் மக்கள் கோரியபடி, இந்தியத் துணைக்கண்டத்தை முஸ்லிம் இந்தியா, இந்து இந்தியா எனப் பிரித்துப்போட்டனர். இந்தப் பிரிவினைக்கான அடிப்படைத் தத்துவத்தைக் காங்கிரசு ஏற்றுக்கொள்ள மறுப்பு காட்டுவதுபோல் பேசிவந்தபோதிலும் பிரிவினையை—துவக்கத்தில் மறுத்தாலும்—இறுதியில் ஏற்றுக்கொள்ள முன்வந்தது. விளைவு—பாகிஸ்தான், இந்தியா என்ற இரண்டு சுதந்தர அரசுகள்.

இப்படிப் பிறந்த சுதந்தர அரசின் அமைச்சராக இருந்துகொண்டுதான் 'முதல் முறையாக நாம் ஒரு அரசாங்கத்தைப் பெற்றிருக்கிறோம்' என்று பிரதாபம் பேசுகிறார் அமைச்சர் தேசாய்!

தென்னகத்தார் சார்பில் நமது கழகம், திராவிடத் தாயக விடுதலை கோரி வருகிறது. இதில் ஒளிவு மறைவு ஒன்றும் கிடையாது. இப்படி சுதந்தரக் குரலெழுப்புவதில் வெட்கப்பட வேண்டியதற்குத் துளியும் இடமில்லை.

இந்த நமது தாயக விடுதலை முழக்கத்தைத்தான், அமைச்சர் தேசாய், பிரிவினைப் பேச்சு எனக் குறிப்பிடுகிறார். முழங்கும் நம்மையும் பிரிவினை பேசுவோர் எனச் சுட்டுகிறார்.

நமது தாயக விடுதலைப் பணியினை, அமைச்சர் தேசாய் எப்பெயர் இட்டு வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளட்டும். ஆதிக்கக்காரர்கள், விடுதலை கோருகின்றவர்களைப் புகழ்ந்து பாராட்டியது கிடையாது. எனவே, தேசாய் போன்ற ஆதிக்கபுரியினரிடம் நாம் பாராட்டை எதிர்பார்க்கவில்லை.

நமது தாயக விடுதலை முழக்கம், ஆதிக்கபுரியினர் செவிகளில் புகுந்திருக்கின்றது—புகுந்திருப்பதுடன் நில்லாது, அவர்களை சிந்தனையைக் கிளறிக்கொண்டுமிருக்கிறது — என்ற இனிக்கும் சேதி, அமைச்சர் தேசாயின் கூற்றிலிருந்து வெளிப்படுகிறது. இதுகண்டு நாம் மகிழ்கிறோம். நிற்க,

நமது கோரிக்கையை மேலும் பரவவோ வளரவோ விடமாட்டோம் என்று அச்சுறுத்துகிறார் அமைச்சர் தேசாய்.

இப்பிரிவினை முனைப்பை முளையிலேயே, தங்களால் செய்யக்கூடியதை எல்லாம் செய்து கிள்ளி எறிந்துவிடப் போவதாகவும் அமைச்சர் தேசாய் ஆர்ப்பரிக்கிறார்.

ஆதிக்கபுரியினராக ஒரு காலத்தில் இருந்துவந்த ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள், இப்படித்தான் இந்தியத் துணைக்கண்டத்துக்கு விடுதலைகோரிய துணைகண்ட மக்களைப்பார்த்து எச்சரித்தார்கள்—எங்கள் பலம் தெரியாதா என அச்சுறுத்தினார்கள்.

எச்சரிக்கை, அச்சுறுத்தல், தடியடி, துப்பாக்கி, சிறைவாசம் ஆகிய அனைத்தையும் அவர்கள் கையாண்டு பார்த்துச் சலித்துப் போயினர்—இறுதியில் இந்தியத் துணைக்கண்டத்தின் மக்கள் சக்திக்கு மதிப்பளித்தனர்.

அதிகாரபுரியினராக தேசாய் திருக்கூட்டத்தினர் இன்று மாறிவிட்டிருப்பதால்— அன்று அவர்களிடம் தாங்கள் விடுதலை கோரியதையும், அதற்கு அவர்கள், துவக்கத்தில் சொல்லம்புகளையும் வில்லம்புகளையும் வீசியதையும், அதைத் தாங்கிக்கொண்டு தழும்பேறிய நிலையிலும் தாங்கள விடுதலை விரும்பி நின்றதையும, பிடிவாதமாகப் பேசிவந்த ஏகாதிபத்தியவாதிகள் இறுதியில் வெளியேறியதையும—அறவே மறந்துவிட்டு, தாயக விடுதலை கோரி வரும் நம்மைப் பார்த்து, 'முளையிலேயே கிள்ளி எறிவோம்' என முழக்கமிடுகிறார்.

'பிரிவினை ஏற்படும்பட்சத்தில் விளையக்கூடியது என்ன' எனக் கேள்வி ஒன்றைக் கேட்டுவிட்டு, 'நாடு சிதறிப்போகும்—இழந்துபட நேரிடும்' என்ற பதிலையும், அமைச்சர் தேசாய் அறிவித்துள்ளார். இதுபற்றிப் பின்னர் ஆராய்வோம்.

'ஐந்தாண்டு' திட்டங்களில் அநீதிக்கு ஆளாகியுள்ளோம்'

'துணிந்தவர்களுக்குப் பணிகிறது - டெல்லி!'

'பணிந்தவர்களைக் குனியவைக்கிறது'

அகில இந்திய அலங்கோலம் பற்றி டாக்டர் ஏ. அருணசலம்

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டைத் துவக்கிவைத்து டாக்டர் ஏ. அருணாசலம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

"பெரிய பெரிய இராட்சசத் திட்டங்கள் வடக்கே! சுண்டைக்காய்த் திட்டங்கள் தெற்கே! 'வடக்கு வாழ்கிறது—தெற்கு வீழ்கிறது' என்பது அடுக்கு மொழி மட்டுமல்ல; மறுக்கவோ மறைக்கவோ முடியாத வேதனை கலந்த உண்மையுமாகும். இத்தகைய பயங்கர நிலையிலிருந்து தென்னாட்டுக்கு விடுதலையளிக்கும் மகத்தான பொறுப்பை மக்களது இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

"அசாம் மாநிலத்தில்—எண்ணெய் ஊற்றுக்கள்; எண்ணெய் சுத்திகரிக்கும் தொழிற்சாலை—பீகாரில்! இது, டெல்லியின் திட்டம். 'கூடாது, தீதானது' எனக்கூறி, டெல்லியை எதிர்த்துப் போர்க்கோலம் பூண்டது, அசாம் காங்கிரஸ் மந்திரிசபை! 'அகில இந்தியர்' என்னும் திரையைக் கிழித்து அசாம் மக்கள் அனைவரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். டெல்லி பணிந்திருக்கிறது! பீகாரில் உள்ளதுபோல் அசாமிலும் இன்னொரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை 50 கோடி ரூபாயில் ஏற்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"போடாத திட்டத்திற்கு ரூ. 50 கோடியைக் கோட்டுகிறது! 12 கோடி ரூபாய் சேலம் அலுமினியத் திட்டத்தை வெட்டுகிறது! பணிந்தவனைக் குனிய வைக்கிறது — துணிந்தவனுக்குப் பணிந்துகொடுக்கிறது, டெல்லி!

"மற்ற மாநில அமைச்சர்கள் தம்தம் மாநிலங்களின் நலனுக்காக விடாப்பிடியாகப் போராடி, டெல்லியை மிரட்டி உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். நமது அமைச்சர்களோ, 'போகட்டுமே எங்கே போகிறது; இந்தியாவில்தானே இருக்கிறது; சிறகுக்கட்டிப் பெருக வாழ்வோம்' என்று கையாலாகாத காரணம் காட்டி, கோட்டை விடுகின்றனர். சென்னை அரசு மட்டும் உள்ள உறுதியுடனும், உரிமை உணர்ச்சியுடனும், கடமையாற்றும் பொறுப்புடனும் டெல்லியுடன் போராடியிருந்தால் தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டைப் பகுதியையும், ஆரணியாறு நீர்த்தேக்கத்தையும் நிச்சயம் இழந்திருக்கமாட்டோம்.

"தமிழகம் கொஞ்சம் கொஞ்சமாகப் பறிக்கப்பட்டு வருவதை உணர்ந்த திராவிட முன்னேற்றக் கழகம், சனநாயக முறையில் டெல்லியுடன் போராடவே சென்ற தேர்தலில் போட்டியிட்டது. சென்னை சட்டசபைக்கு 15 பேர்களும், டெல்லிபாராளுமன்றத்திற்கு இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தி.மு. கழகம் சட்டசபையில் நுழைந்த பிறகு சட்டசபை நடவடிக்கைகளின் தரம் உயர்ந்திருக்கிறது. வடநாடு - தென்னாடு பிரச்சினையைக் காங்கிரஸ் அமைச்சர்களும், சட்டசபை உறுப்பினர்களும் உணர்கின்றனர். டெல்லி பாராளுமன்றத்திலும் நமது உறுப்பினர்கள் உரிமைக்குரல் கொடுத்துவருகிறார்கள்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை கேட்டது 400 கோடி; கிடைத்தது 153 கோடி ரூபாய்! பஞ்சாபில் பக்ரா - நங்கல் திட்டத்திற்கு மட்டும் 176 கோடி ரூபாய் கொடுக்கும் டெல்லி சர்க்கார், சென்னையின் ஏனைய திட்டங்களுக்கு ரூ. 400 கோடி கொடுக்க மறுக்கிறது. 'வரிப் பங்கீடு' நிர்ணயிக்கும் நிதிக் கமிஷனிடமிருந்து சென்னை எதிர்பார்த்தது ரூ. 4 கோடி; கிடைத்தது ரூ. 2 கோடி! மேற்கு வங்கத்திற்குத் தனி உபகாரப் பணமாக ரூ $3\frac{1}{2}$ கோடி அளிக்கும் டெல்லி சர்க்கார், சென்னையின் தேவைக்கேற்ற உதவியளிக்க மறுக்கிறது.

"கோசி நதியால் வெள்ள விபத்து ஏற்பட்டபோதும், கட்சபூகம்ப விபத்து ஏற்பட்டபோதும், அசாம், உத்தரப் பிரதேசம் முதலிய மாநிலங்களில் வெள்ள விபத்துக் காலத்திலும் விமானத்தில் விரைந்து சென்று, வடநாட்டினருக்கு ஆறுதலும், தேறுதலும் கூறிய நேரு பண்டிதர், தஞ்சை புயலால் பாதிக்கப்பட்டபோதும் அரியலூர் இரயில் விபத்து ஏற்பட்டபோதும் தமிழ்நாட்டுக்கு வரவேயில்லை. அவர் தப்பித்தவறி இங்கு வந்தால், தேர்தல் பிரச்சாரத்திற்கோ, அல்லது விழாக்களில் கலந்துகொள்வதற்கோதான் வருவார்; வந்தாலும் திரும்பும்போது அரசியல் தலைவர்களைத் தூற்றுமல் போனதில்லை.

"அன்று தமிழர்களை 'நான் சென்ஸ்' என்றார்; அதைக் கண்டிக்கும் வகையில் மும்முனைப் போராட்டம் நடத்தினோம். அண்மையில் காந்தி கிராமத்திற்கு வந்த பண்டித நேரு பெரியாரை நோக்கி 'பைத்தியக்காரர், காட்டுமிராண்டி, முட்டாள், நாட்டை விட்டு ஓடு' என்று இழி மொழி பேசியிருக்கிறார். பெரியாரை நாட்டைவிட்டு ஓடு என்று சொல்ல இவர் யார்? பெரியார் குற்றவாளியா அல்லவா என்று தீர்ப்பு கூறும் பொறுப்பு நீதிபதியைச் சேர்ந்தது ஒருவர் மீது வழக்கு விசாரணையிலிருக்கும் போது, அவரைப்பற்றி அபிப்பிராயம் கூறுவது குற்றமாகும். அப்படிப் பேசுவது தவறு என்பதை அறியாத ஒருவர் பேசினால் நாம் அதைப் பொருட்படுத்தமாட்டோம். அரசியல் மேதை — ஆசியாவின் ஜோதி—அகிம்சா மூர்த்தி—அகில உலக சமாதான சிற்பி என்றெல்லாம் கூறப்படும் நேரு—சீமையில் சட்டம் பயின்ற நேரு தன் பதவியை மறந்து, கொள்கையை மறந்து, பட்டத்தை மறந்து இவ்வாறு சனல் தெறிக்கும் வார்த்தைகளை அள்ளி வீசியிருப்பதை யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். பண்டிதரின் பேச்சில், அதிகாரம், ஆணவம், ஆத்திரம் தொனிக்கிறதே ஒழிய, பொறுப்பும் பொருளும் புலப்படவில்லை. அவருடைய போக்கு அன்பு வழி காட்டவில்லை. மாறுக மக்களின் மனதை நோகவைத்திருக்கிறது."

திருநெல்வேலியில் துணி பொம்மைத் தொழில் பயிற்சி நிலையமாம்!

12-பேருக்கு ஓராண்டுக் காலத்திற்குப் பயிற்சியாம்

துணி பொம்மைகள் தயாரிப்புக்கான பயிற்சி நிலையம் ஒன்றை, திருநெல்வேலியில் ஏற்படுத்த அரசாங்கம் அனுமதித்துள்ளது. முதலீட்டுச் செலவு ரூ 2,300-ம், ஆண்டு ஒன்றுக்கு நடை முதல் செலவு ரூ. 11,730-ம் இதற்கு ஆகும்.

துணி பொம்மை செய்யும் தொழிலுக்குப் புத்துயிர் அளிப்பதும் அந்த வட்டாரத் தொழில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிப்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாம்!

உத்தேச நிலையத்தில் 12 பேருக்கு ஓராண்டுக் காலத்திற்குப் பயிற்சி அளிக்கப்படும்; அப்போது மாதம் ரூ. 25 உபகாரச் சம்பளம் உண்டு.

இத்திட்டத்தின் செலவு முழுவதற்குமாக இந்திய அரசாங்கம் ரூ 14,030 அனுமதித்துள்ளது.

ஆங்கிலத்தை ஒழிக்கத் தீவிர இயக்கம் வேண்டுமாம்

கலேல்கார் சாகிபின் இந்தி வெறிக் கூச்சல்

அலகாபாத், டிச. 26—

ஆங்கிலத்திற்கு எதிராக ஒரு தீவிரமான இயக்கம் நடத்த வேண்டுமென்று காகா கலேல்கார் எம். பி., இங்கு கூறினார்.

காந்தியாருக்குப் பிறகு ஆங்கில ஒழிப்பில் அக்கறை கொண்டவர்கள் இல்லாமற்போய்விட்டார்களாம் — வருத்தப்பட்டிருக்கிறார் கலேல்கார் சாகிப்!

'பாரதிய பரிஷத்'தின் 15-வது ஆண்டு விழாவில் பேசிய அவர், 'ஆங்கிலத்தை ஒழிப்பதற்கு உடனடியாகப் போதுமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், இந்நாட்டில் ஆங்கிலம் ஆழமாக வேர் விட்டுவிடும்' என்றும் பூச்சாண்டி காட்டியிருக்கிறார்!

"இந்தியைவிட ஆங்கிலமே உயர்ந்தது என்பது நிலைநாட்டப்படுமானால், எதிர்காலத்தில் இந்த நாட்டு மக்கள்—அப்போது சோஷலிச சமுதாயமோ அல்லது கம்யூனிச சமுதாயமோ இருந்தாலும்—அதற்கு எதிராகக் கிளர்ந்து எழுவர்"

என்றும் அவர் பேசினாராம்!

ஆங்கிலத்தைப் போதனமொழியாகவோ, நிர்வாக மொழியாகவோ வைத்துக்கொள்ளக்கூடாதாம்! அதனை சர்வதேச விவகாரங்களுக்காக மட்டும் உபயோகிக்கவும், கற்றுக்கொள்ளவும் வேண்டுமாம்—கலேல்கார் சாகிப்தான் கூறியிருக்கிறார்!

இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளும் ஒரே கலாச்சாரத்தைச் சேர்ந்தவையாம்; ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையாம்—பச்சையாகப் புளுகியிருக்கிறார் கலேல்கார் சாகிப்!

இந்திதான் இந்தியாவின் ஒரே தேசிய மொழியாவதற்கும், இதர பிரதேச மொழிகளின் மூத்த சகோதரியாவதற்கும் பொருத்தமானதாம்!

நெல்லை மாவட்டத்தில் கொள்கை முழக்கம்

பட்டி தொட்டிகளிலெல்லாம் பொதுச்செயலாளருக்கு மகத்தான வரவேற்பு

சங்கரன்கோவில், டிச. 15—

6—12—57 பகல் சுமார் 11-30 மணிக்குப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சங்கரன்கோவிலுக்கு வருகை தந்தார். இரயில்வே நிலையத்தில் மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம், நகரச் செயலாளர் எஸ். ஆவுடையப்பன் மற்றும் கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் ஏராளமாகக் கூடிநின்று மாலைசூட்டி வரவேற்றனர். அங்கிருந்து புறப்பட்டு மாவட்டக் கழக அலுவலகத்திற்குச் சென்று அங்கு கழகத் தோழர்களுடன் கழக நிலைமைபற்றிப் பேசினார்.

படத் திறப்புவிழா

மாலை 4-45 மணியளவில் இந்நகர் கோமதியம்பாள் போர்டு உயர்நிலைப்பள்ளியில், நகர் காங்கிரஸ் பிரமுகரும், பிரபல வர்த்தகருமான திரு. எஸ். இராமசாமி (முதலியார்) அவர்கள் தலைமையில் முன்னாள் நெல்லை மாவட்டக் கழகத் தலைவர் காலஞ்சென்ற திரு. ஐ சி. ஈஸ்வரம்பிள்ளை அவர்களின் உருவப்படத்தை பொதுச்செயலாளர் திறந்து வைத்து, அவர் மக்களுக்குச் செய்த உதவிகளையும், உயர்நிலைப்பள்ளியில் அவரது நிழற்படமிருந்து நமக்கு வழிகாட்டும் வகைகளைப் பற்றியும் மிக விளக்கமாகப் பேசினார்.

கூட்டத்தில் பேச்சாளர்களுக்குப் பல கிளைகளின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. தோழர் ப. பழனி அவர்களின் ஆண்மகனுக்கு 'இளங்கோ' என்று பொதுச்செயலாளர் பெயர் சூட்டினார்; அதன் நினைவாக சேலம் வழக்கு நிதிக்கு ரூ. 2. அன்பளிப்பாகத் தரப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின், செயலாளர் ஆவுடையப்பன் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

9-25 மணிக்கு புளியங்குடி செல்லும் வழியில் நகரப் பிரமுகரும் பிரபல வர்த்தகரும் சங்கர் பஸ் உரிமையாளருமான திரு. எ. வி. ஆர். வி. சங்கரநாராயணன் அவர்களால் வரவேற்பு அளிக்கப்பட்டது.

முள்ளிக்குளம்:

சங்கரன் கோவில் வட்டம் முள்ளிக்குளம் கழகத் தோழர்களாலும், நகரப் பிரமுகர்களாலும் பொதுச்செயலாளர் அவர்களுக்கு மலர்மாலை சூட்டிவரவேற்பளிக்கப்பட்டது; பொதுச்செயலாளர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

புளியங்குடி:

புளியங்குடி எல்லையை அடைந்ததும் திரு. எம். பக்கிரிசாமி அவர்கள் குழுவினரின் நாதசுர வாத்தியங்கள் முழங்க, பொதுச்செயலாளர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். இரவு 11-25 மணி அளவில் மாவட்டக் கழக உறுப்பினர் தோழர் வி. எஸ். இராமசாமி அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று. நகரக் கழகச் சார்பில் செயலாளர் பி. ஏ. கங்காதரன் அவர்களால் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது தலைவர் முன்னுரைக்குப் பின் பொதுச்செயலாளர் அவர்கள் சுமார் 2 மணிநேரம் சொற்பொழிவாற்றினார்.

பொதுச் செயலாளருக்கும், மாவட்டக் கழகச் செயலாளருக்கும் பல கிளைக் கழகங்களின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன, இரவு 1 மணியளவில் கூட்டம் முடிவுற்றது.

அம்பாசமுத்திரம்:

7—12—57 மாலை 6-30-க்கு அம்பை தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நெல்லை வழக்கறிஞர் திரு. சு. இரத்தினவேல் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் இராமநுஜம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தலைவர் முன்னுரைக்குப்பின் பொதுச் செயலாளர் அவர்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்தும், சென்னை மந்திரிகளின் கையாலாகத் தன்மையும் மிக விளக்கமாக இரண்டு மணிநேரம் பேசியபின் தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் முடிவுற்றது.

பல கிளைகளின் சார்பில் தலைவர், பொதுச்செயலாளர், மாவட்டச் செயலாளர், ஆகியவர்களுக்கு மலர்மாலையும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

வீரகேளம்புதூர்:

அம்பை கூட்டம் முடிந்தது இரவு 9-15 மணிக்கு புறப்பட்டு இரவு 10-30 மணியளவில் வீரகேளம்புதூர் போய்ச் சேர்ந்தனர்; கழகச் செயலாளர் தோழர் வி. எம். சேக்முகைதீன் தலைமையில் தொடங்கப்பட்டு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது; தோழர்கள் ஆறுமுகம், ஆ. திராவிடமணி, செங்கோட்டை அனிபா ஆகியோர் பேசியபின், தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் சிறிது நேரம் பேசியபின் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேச எழுந்தபோது மழைதூர ஆரம்பித்தது; பொதுச்செயலாளர் அவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்ததால் யாரும் கலைந்துசெல்லாமல் அமைதியாகவே இருந்தனர். மேலும் பெருமழை ஆரம்பித்ததால் முக்கால் மணி நேரத்தில் பேசி முடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மாவட்டச் செயலாளர், பொதுச்செயலாளர் ஆகியோருக்கு பல மன்றங்கள் சார்பிலும், கிளைக் கழகங்கள் சார்பிலும் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

நெல்லை:

சிறப்புச் சொற்பொழிவு

8—12—57 காலை 10 மணியளவில் திருநெல்வேலி பாப்புலர் திரைப்பட அரங்கில் நகர தி. மு. கழகச் சார்பில், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்புச் சொற்பொழிவுக்கு, இதுவரையில் நெல்லையே கண்டிராத அளவுக்குக் கூட்டம் கூடியிருந்தது.

வழக்கறிஞர் திரு. சு. இரத்தினவேல்பாண்டியன் தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது; இசை முரசு நாகூர் அனீபா அவர்கள் இன்னிசை வழங்கினார்.

கூட்ட ஆரம்பத்தில் பல கிளைகள், மன்றங்கள் சார்பில் தலைவர்கள் அனைவருக்கும் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

நெல்லை மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் சிறிது நேரம் பேசியபின் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'இலக்கிய இன்பம்' என்னும் பொருள் பற்றி இரண்டேகால் மணி நேரம் பேசியபின், சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காக பொதுச்செயலாளர் அவர்களிடம் ரூ. 301-ம், தச்சநல்லூர் கிளையின் சார்பில் ரூ. 5-ம், உடையார்பட்டி அழகிரி மன்றச் செயலாளர் ஆ. இலட்சுமணன் அவர்களின் ஆண் மகவுக்கு தலைவர் அவர்களால் 'நெடுஞ்செழியன்' என்று பெயர் சூட்டப்பட்டதன் நினைவாக ரூ. 2-ம், பாப்பாக்குளம் ப. இசையன்பன் பெண் மகவுக்கு பொதுச்செயலாளர் அவர்களால் 'பூங்கொடி' என்று பெயர் சூட்டப்பட்டதன் நினைவாக ரூ. 2-ம் அன்பளிப்பாகத் தரப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப்பின் பாபுலர் திரைப்பட அரங்கு உரிமையாளர் அவர்களுக்கும் பொது மக்களுக்கும் நகரக் கழகச் செயலாளர் வி. பத்மநாபன் நன்றி தெரிவித்தார்.

மாங்கொட்டாபுரம்:

ஏரல் திருமணத்திற்குப் போகும் வழியில், வழி நெடுக திருவிழாபோல் காட்சியளித்தது; விவசாயிகள் சார்பில் வளைவுகள் போட்டு சாலையில் அதிர்வேட்டுகள் முழங்க பொதுச்செயலாளர் அவர்களையும், தோழர்கள் சுப்பிரமணியம், அனீபா ஆகியோரையும் வரவேற்றனர்; பொதுச்செயலாளர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

பெருங்குளம்:

தி. மு. கழகச் சார்பில் சாலையில் வளைவுகள் போட்டு, வாணவேட்டுகள் முழங்க வரவேற்கப்பட்டது; பொதுச்செயலாளர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மங்களக்குறிச்சி:

தி. மு. கழகச் சார்பில் செயலாளரால் வரவேற்கப்பட்டனர். பொதுச்செயலாளர் அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர் அவர்களுக்கும் கைத்தறி ஆடைகள் அணிவித்து வரவேற்கப்பட்டது; பொதுச்செயலாளர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

ஏரல்:

திருமணம்

நாகூர் அனீபா அவர்கள் இசை முழங்க, மாலை 4 மணியளவில் கழகத் தோழர் சித்திரவேலு—தோழியர் பிரமு ஆகியவர்களுக்கு தோழர் சிவசங்கு தலைமையில் நடைபெற்ற சீர்திருத்தத் திருமணத்தில் பொதுச்செயலாளர் அவர்கள் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம் பற்றியும், மணமக்களின் பெற்றோர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப் பற்றியும் ஒரு மணி நேரம் பேசினார். பல கிளைக் கழகங்கள் சார்பிலும், மன்றங்கள் சார்பிலும் மணமக்களுக்கு வாழ்த்துக்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன. பொதுச்செயலாளர் அவர்களுக்கும் அனீபா அவர்களுக்கும் வரவேற்புகள் வழங்கப்பட்டன.

தெற்கு ஆத்தூர்:

8—12—57 மாலை 6½ மணிக்கு தெற்கு ஆத்தூரிலிருந்து பொதுச்செயலாளர், மாவட்டச் செயலாளர், நாகூர்-அனீபா ஆகியோர் காரில் அமர்ந்திருக்க ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பொதுக்கூட்ட மேடை வந்து சேர்ந்ததும் அனீபா அவர்கள் இன்னிசை முழங்க 7½ மணிக்கு, தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று; தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் சிறிது நேரம் பேசியபின் பொதுச்செயலாளர் நீண்ட நேரம் பேசினார்; சில கேள்விகளுக்குத் தக்க பதில் அளித்தார். பல கிளைக் கழகங்கள் சார்பிலும், தூத்துக்குடி நகரக் கழகச் சார்பிலும் கைத்தறி ஆடைகள் வழங்கப்பட்டன. தூத்துக்குடி நண்பர் ஒருவரால் 64 காலணா முடிப்பு கொடுக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் முடிவுற்றது.

உடன்குடி:

இரவு 10 மணியளவில் பொதுச்செயலாளர் உடன்குடி வந்து சேர்ந்தார். நாகூர்-அனீபா இன்னிசை முழங்க 10-30 மணி அளவில் தோழர் சாமுவேல் தலைமையில் கூட்டம் துவங்கப்பட்டது; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இரண்டு மணி நேரம் பேசினார்; மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் அவர்களால் இரண்டு தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் தோழர்கள் நெல்லை ச. வீரபாகு, பாற்குளம் தனசேகரன் ஆகியோரும் பேசினர்.

புதியம்புத்தூர்:

9—12—57 மாலை 5 மணியளவில் புதியம்புத்தூர் வந்து சேர்ந்தனர்; நகர் அன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் வளைவுகளும், தோரணங்களும், வரவேற்புத் தட்டிகளும் காணப்பட்டன. புதியம்புத்தூர் நகர் எல்லையை வந்தடைந்ததும் நகரக் கழகச் செயலாளர், மற்றும் கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் கூடி நின்று வரவேற்றனர்.

பொதுச்செயலாளர், மாவட்டச் செயலாளர், இசைமுரசு நாகூர்-அனீபா ஆகியோர் நகர் முழுவதும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஊர்வலம் மேடை வந்தடைந்ததும், ஊராட்சி மன்றச் சார்பில், தோழர் பெ. துலாசாமி அவர்களால் ஒரு வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப்பட்டது; ஊராட்சி மன்றத் தலைவர் தி. தங்கய்யா அவர்கள் மலர் மாலை அணிவித்தார். பிறகு நகரக் கழகச் சார்பாகவும், தனிப்பட்டோர் சார்பாகவும் 11 வரவேற்பு இதழ்கள் அளிக்கப்பட்டன. மாவட்டச் செயலாளர், அனீபா ஆகியோர்களுக்குக் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

6-30 மணியளவில் தோழர் செ. இ. தங்கராசு அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது; செயலாளர் பெ. துரைசாமி அவர்கள் பஞ்சாயத்து விஷயமாக சிறிது நேரம் பேசிய பிறகு, தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் கைத்தறியாளர் நிலை பற்றிப் பேசினார். இறுதியாக பொதுச்செயலாளர் அவர்கள், அரசியலாரின் போக்கு பற்றி இரண்டு மணி நேரம் பேசினார்: தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

செபத்தையாபுரம்:

இரவு 9-45 மணியளவில், பொதுச்செயலாளர் இங்கு வந்து சேர்ந்தார்; செபத்தையாபுரம் முழுவதும் வாழை மரங்களாலும், மின்சார விளக்குகளாலும், வளைவுகளாலும், தோரணங்களாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது; நகர் அன்று திருவிழா போல் காட்சியளித்தது.

நகர் எல்லையை வந்தடைந்ததும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த காரில் பொதுச்செயலாளர், மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம், நாகூர்-அனீபா ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்; வாணவேட்டுகளும், மேளவாத்தியங்களும் முழங்க சுமார் ஒன்றே கால் மணிநேரம் ஊர்வலம் வந்து பொதுக்கூட்ட மேடையை அடைந்தது. நாகூர் - அனீபா அவர்கள் இன்னிசை முழங்க, தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது; பொதுச்செயலாளர் தற்கால அரசியல் பற்றியும், நேருவின் பெருந்தன்மையற்ற பேச்சுகள் குறித்தும் மிக விரிவாகப் பேசினார். இரவு 12-30 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

பல கிளைக் கழகங்கள் சார்பில் தலைவர்களுக்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

சாயர்புரம் தி. மு. கழகச் சார்பில் சேலம் வழக்கு நிதிக்கு 207 காலணா கொண்ட பணமுடிப்பு கொடுக்கப்பட்டது.

குறிப்பு: புளியங்குடியில், அப்பாதுரையார் மணிவிழா நிதிக்கு ரூ. 2-ம், 'நம் நாடு' நிதிக்கு ரூ. 2-ம் கொடுக்கப்பட்டது.

10—12—57-ல், 11½ மணிக்கு, மதியம் நெல்லை மாவட்டத்திலிருந்து பொதுச்செயலாளர் அவர்களை தென்காசி இரயில்வே நிலையத்தில் செயலாளர் செல்லப்பா, ப. கு. வெ. சன்ஸ் அவர்களும், மற்றும் கழகத் தோழர்களும், மாவட்டச் செயலாளர்—பொதுச்செயலாளர் — அனீபா ஆகியவர்களை வழியனுப்பிவைத்தனர். 12-25 மணிக்கு, சங்கரன் கோவில் இரயில் நிலையத்தை வந்தடைந்ததும், தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் அவர்களும், மற்றும் கழகத் தோழர்களும் பொதுச்செயலாளர் அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு முகவூருக்கு வழியனுப்பி வைத்தனர்.

தெரிந்தும் தீங்கை தேடிக்கொள்வதா?

நியூயார்க், டிச. 27—

புகைப் பிடிப்பதால் சுவாசப் பையில் புற்றுநோய் வருமென்று பல டாக்டர்கள், விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நிபுணர்கள் எச்சரித்தும், அமெரிக்க மக்கள் புகைப் பழக்கத்தைக் குறைத்து கொள்ளவில்லை.

சென்ற ஆண்டைவிட அதிகமாக, 1,900 கோடி சிகரெட்டுகளை இந்த ஆண்டில் அவர்கள் உபயோகித்துள்ளனராம்.

மொத்தம் 41,000 கோடி சிகரெட்டுகளை இந்த ஆண்டில் அமெரிக்கர்கள் புகைத்துள்ளனராம்!

ஆச்சரியமே ஆச்சரியம்!

வாஷிங்டன்—

கதிரியக்கம் பாதிக்காமல் தடை செய்ய எலியின் மண்ணீரலிலிருந்து எடுக்கப்படும் ஜீவ அணு இல்லாத பொருளுக்கு சக்தியிருப்பதாக ஆராய்ச்சிகள் மூலம் தெரியவருகிறதாம்!

கதிரியக்கப் பாதைக்கு எதிராக மிருகங்களையும், மனிதர்களையும் பாதுகாக்கும் ஒரு இரசயானம் இந்த மண்ணீரலில் இருக்குமென்றும், வருங்காலத்தில் இந்த இரசசாயனத்தைத் தனியாகப் பிரித்து செயற்கைப்பொருளாக மாற்றமுடியும் என்று எதிர்பார்க்கப் படுகிறதாம்!

தாராளமே தாராளம்!

சென்னை சர்க்கார் திட்டத்திற்கு பேரரசின் ஒப்புதலாம்!

சென்னை, டிச. 27—

நொச்சிக்குப்பம் அபிவிருத்திக்கான சென்னை சர்க்காரின் திட்டத்தை இந்தியப் பேரரசு ஏற்றுக் கொண்டுவிட்டதாம்!

இதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள ரூ. 4,55,000 தொகையில் பாதியைக் கடனாகவும், கால்பங்கு மானியமாகவும், மாநில சர்க்காருக்கு வழங்குமாம்!

1959 மார்ச் 31-ந் தேதிக்குள் நிறைவேற்றப்படவேண்டிய இத்திட்டத்தின்கீழ், நொச்சிக்குப்பம் பகுதியில் வசிக்கும் 364 குடும்பங்களுக்கு மனைக் கட்டுகள் வழங்கப் படும்.

அரிசி கொள்முதல் செய்ய

ரூ. 6 கோடி தேவை

டெல்லியை மத்தியப் பிரதேசம் வற்புறுத்துகிறது

போபால், டிச. 27—

அரிசி கொள்முதல் செய்ய ரூ. 6 கோடி தரவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை, மத்தியப் பிரதேச மாநில அரசாங்கம் வற்புறுத்தியுள்ளதாம்.

அம்மாநிலத்தில் அறுவடையின் போது கட்டாயமாக 60 சதவிகிதம் கொள்முதல் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

டிச. 14-ம் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு 2-புள்ளி குறைந்து 392-ல் நின்றது. அரிசி, காய்கறி, நல்லெண்ணெய் ஆகியவைகளின் விலை குறைந்ததே இதற்குக் காரணம்.

விடுதலை கோருவோர்மீது பண்டிதர் பாய்ச்சல்!

இந்தியா இனியொரு பிரிவினையைசகிக்காதாம்

பிரிவினை பற்றிப் பேசுவோர் மீது கடுமையான அரசாங்க நடவடிக்கையாம்!

கௌஹாத்தி, டிச 29—

வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து விடுதலை கோருகிற மக்கள்மீது பாய்ந்திருக்கிறார், அந்த ஏகாதிபத்தியத்தின் நாயகரான பண்டித நேரு!

கௌஹாத்திக் கூட்டம் ஒன்றில் நேற்று பேசிய அவர், 'இந்தியாவில் இனியொரு பிரிவினைக்கு இடம் இல்லை' என்று கடுகடுப்புடன் பேசியிருக்கிறார்.

"இனியொரு பிரிவினையை இந்தியா சகித்துக்கொள்ள முடியாது; பிரிவினைக் கருத்துக்களைப் பேசுவோர்மீது சர்க்கார், கடுமையான நடவடிக்கை எடுக்கும்" என்று அகங்காரக் கூச்சலிட்டிருக்கிறார், பண்டிதர்!

"பிரிவினை மூலம் சுதந்தரம் பெறுவதற்கு, நாடு அநியாயவிலை தந்துவிட்டதாம்; "எனவே, மேலும் இந்தியாவைப் பிரிப்பதற்கான முயற்சிகள், எங்கும் நடைபெறக் கூடாது" என்று கட்டளையிட்டிருக்கிறார், பண்டிதர்!

இந்தியாவின் ஒற்றுமைதான் இன்றுள்ள பிரதான தேவையாம்! இந்தியாவின் பலம், அதன் பொருள் வளங்களைக் கொண்டு கணக்கிடப்படமாட்டாதாம்; மாறாக, அதன் மக்களின் குணத்தைக் கொண்டே கணக்கிடப்படுமாம்!

எனவே, எவரும் தங்கள் மாநிலம், தங்கள் பிரதேசம் என்று பேசுவது கூடாதாம்—பண்டிதர் கூறியிருக்கிறார்.

கேட்டீரா, சேதி!

'வார்தா செக்கு'கள் சம்பந்தமான 92-காட்சி நிலையங்களை நடத்துவதற்காக ரூ. 4,77,826 மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்றிருப்பது பற்றி பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும் இந்திய எண்ணெய் வித்துக்கள் குழு அறிவித்திருக்கிறதாம்!

சமுதாய வளர்ச்சி வேலைகள் நடைபெறும் 260 தொகுதிகளில் அத்தகைய நிலையங்களை நடத்துவதற்காக ரூ. 13 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்றும் மீதியுள்ள ரூ. 8,22 174-ம் 168 நிலையங்களுக்கு அனுமதிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறதென்றும் மாநிலங்கள் சபையில் அமைச்சர் ஏ. பி. ஜெயின் கூறியிருக்கிறார்.

ஆனால் இத்திட்டம் தமிழ்நாட்டில் இடம்பெற்றதாகச் செய்தியிருந்து தெரியவில்லை.

தமிழகத்தில் சிறு தொழில் வளர்ச்சியும் இராது!

சர்க்காரின் திட்டங்களில் பெரும் பகுதி வெட்டு!

மீண்டும் டெல்லிக்குக் காவடி எடுக்க உத்தேசிக்கப்படுகிறதாம்!

சென்னை, டிச. 29—

"1958—59-ம் ஆண்டிற்கான சென்னை சர்க்காரின் சிறு தொழில் வளர்ச்சித்திட்டம் ரூ, 106 இலட்சம் மதிப்புடையதாயிருந்தது.

இந்தத் தொகையளவு திட்டத்தை அங்கீகரிக்க 'டெல்லி தேவன்' மறுத்துவிட்டானாம்!

இந்தத் திட்டங்களை, ரூ. 56·5 இலட்சம் மதிப்புடையதாகத் திட்டக்குழு வெட்டிவிட்டதாம்!

'கைத்தொழில் வளர்ச்சி'த் திட்டங்களுக்கும் அதே கதிதான் நேர்ந்துள்ளதாம்!

ரூ. 23 இலட்சம் ஒதுக்க வேண்டுமென சென்னை சர்க்கார் கேட்டனராம்; ஆனால் திட்டக் குழுவோ ரூ. 9 இலட்சம்—அதாவது, சுமார் மூன்றில் ஒரு பங்கு திட்டத்தையே அனுமதித்ததாம்!

அதேபோல, தனியார் தொழில்களுக்கு உதவுவதற்கென சர்க்கார் ரூ. 25 இலட்சம் கேட்டது என்றும், திட்டக்குழு, இதனை ரூ. 8 அல்லது 9 இலட்சமாகக் குறைத்துவிட்டது என்றும் கூறப்படுகிறது.

இப்படி, பெரும் பங்குக் கோரிக்கைகள் வெட்டப்பட்டுவிட்டதால், அனுமதிக்கப்பட்டிருக்கிற தொகை, ஏற்கனவே எழுப்பப்பட்டிருக்கும் கட்டிடம், சாமான்கள் முதலியவற்றிற்குத்தான் சரியாக இருக்கும் என்றும், புதிதாக எதுவும் செய்யமுடியாது என்றும் கூறப்படுகிறது.

என்றாலும் சென்னை சர்க்கார், டெல்லிக்கு மீண்டும் காவடி எடுத்து, திட்டத்தில் வெட்டப்பட்டவற்றைக் குறைதுக்கொள்ளுமாறு கேட்கப்போகிறார்களாம்!

வடக்கே வளரும் தொழில்கள்

பண்டித நேரு பரவசம்

கௌஹாத்தி, டிச. 28—

"புதிதாக மூன்று இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் நிர்மாணித்திருக்கிறோம்; அவை இன்னும் இரண்டு அல்லது மூன்றாண்டுகளில் உற்பத்தியைத் துவங்கிவிடும்"

என்று, கௌஹாத்திப் பொதுக் கூட்டத்தில், பண்டித நேரு பரவசப்பட்டுப் பேசியிருக்கிறார்.

"நான்கு அல்லது ஐந்தாண்டுக் காலத்தில் பெரிய தொழிற்சாலைகளைத் துவங்கிவிட முடிகிறது; ஆனால், அவற்றை நடத்திச் செல்லத் தேவையான மனித சக்தியைத் திரட்டுவதுதான் கஷ்டமாயிருக்கிறது.

"இந்தியாவில், இப்போது சுமார் 72,000 எஞ்சினியர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது; ஆனால், இரண்டாம் திட்டத்தை நிறைவேற்ற 5 இலட்சம் எஞ்சினியர்கள் தேவைப்படுகின்றனர்" என்றும் பண்டிதர் கூறியிருக்கிறார்.

வடவருக்குத் தொழில் அமைச்சர் அழைப்பு

தென்னாட்டில் முதலீடு செய்யக் கோருகிறார்

சென்னை, டிச 30—

"வடநாட்டவர் தென்னாட்டில் தொழில்கள் துவங்குவதை தென்னாட்டு மக்கள் விரும்பவில்லை என்ற எண்ணம் நிலவுவது தவறானதாகும்; வடக்கு—தெற்கு கோஷங்களைக்கண்டுதொழில் அதிபர்கள் ஏமாறக்கூடாது"

என்று 3-வது அகில இந்திய உற்பத்தியாளர் மாநாட்டில் சென்னை தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதே விழாவில், நெய்வேலித் திட்டத்தைப் பற்றிப் பேசுகையில், 'திட்டமிட்டப்படி நெய்வேலி திட்டம் பூர்த்தி அடையும்; துரிதமாக இதை நிறைவேற்றி வைக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும்' என்று உறுதியளித்துள்ளார்.

தொடர்ந்து அவர் மாநிலத் தொழிலாளர் திறன் பற்றிப் பேசுகையில், 'சென்னை மாநிலத்தில் தொழில் நுட்பம் தெரிந்தவர்கள், நிபுணர்கள் அதிக அளவில் உள்ளனர்; நமது மாநிலத்தை விரைவில் தொழில்மயமாக்கலாம்; மேற்கு நாடுகளிலுள்ள தொழிலாளர்களுக்கு ஈடான திறமையை நமது தொழிலாளர்கள் பெற்றுள்ளனர் என்று ஜெர்மன் நிபுணர்களும் பாராட்டியுள்ளனர்' என்றார்.

சென்னை மாநிலத்தில் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் தொழில்கள் பற்றிப் பேசுகையில் மேட்டூரில் கூகிதத் தொழிற்சாலை ஏற்படப்போகிறது; சேலத்தில் இரும்பு — அலுமினியம் தொழிற்சாலை ஏற்படப் போகிறது; அப்பா சமுத்திரத்தில் மற்றொரு தொழிற்சாலைஏற்படப் போகிறது' எனமெல்லாம பெருமையாகப பேசிவந்தோம்; ஆனால் தொழில் அபிவிருத்தி நிறுவனத்திடம அனுமதி பெற்றுவிட்டால் மட்டும் போதாது; முதலீடு செய்து தொழில்களைத் துவக்க முன்வர வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

இந்திதான் ஆட்சிமொழியாம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"இந்தியை ஆட்சி மொழியாகப் புகுத்தும் விதம், பிரதேச மொழியின் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படாததாக இருக்க வேண்டும்" என்றும் அவர் கூறினாராம்!

"அவசரப்பட்டு இந்தியைப் புகுத்த விரும்புகிற சில இந்திப் பிரியர்களின் போக்கு தனக்குப் பிடிக்கவில்லைதானும்? ஆனல் அதேபோது, ஆட்சி மொழியாக ஒரு இந்திய மொழி புகுத்தப்படுவதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வோரின் நோக்கமும் தனக்குப் பிடிக்கவில்லையாம்!

ஆதிக்கக்காரர்கள் ஒன்று சேருகின்றனர்!

தென்னிந்தியாவில் இந்தி அமுலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்கு மட்டும் இந்தியப் பிரதமருக்கு உடனிருந்து ஆதரவளிக்க 'ஜன சங்க'ம் முன்வந்துள்ளது; அதன் செயலாளர் ஜோஷி என்பார் இங்கு பேசுகையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலத்தின் சிறப்புப்பற்றி ஆச்சாரியார்

ஐதராபாத், டிச. 30—

இங்கு நடைபெறும் 8-வது இந்திய ஆங்கில ஆசிரியர் மாநாட்டிற்கு, திரு. இராசகோபாலாச்சாரியார் அனுப்பியுள்ள செய்தியில், 'ஆங்கிலத்தையும், அதன் இணையற்ற இலக்கியத்தையும் முன்போலவே இந்தியா முக்கியமாகக் கருதவேண்டும்' என்று யோசனைகூறி, இந்திவெறியர்களின் நிலையை விளக்கியுள்ளார்.

தென்னவரை அவமதிக்கிறதா டெல்லி?

4-வது வகுப்பு மத்திய அரசாங்க ஊழியருக்குரிய எல்லா அரசாங்க உத்தரவுகளும் இனி இந்தி மொழியில் கிடைக்குமாம். இதை அதிகார பூர்வமாக அறிவித்துள்ளனர்.

இதை 'இந்தி வெறியர்கள் வரவேற்பார்கள்; 'இந்தி' மொழியை அறியாத தென்னாட்டு அரசாங்க ஊழியர்கள் இந்த ஏற்பாட்டை எவ்வாறு வரவேற்பர் என்பது தெரியவில்லை!

முற்றிவிட்ட காச நோய் நபர்கள் தனிப்படுத்தப்படுவர்

ஓட்டேரியில, சென்னை நகர சபையில் நடத்தப்படும் க்ஷயரோக மருத்துவமனையைத் தாங்களே ஏற்றுக்கொண்டு, அதைப் பரவலாக்குவதென சென்னை சர்க்கார முடிவு செய்திருக்கிறது.

இதன் மூலம், முற்றிவிட்ட காச நோய்க்காரர்களுக்குத் தனியாக 138 படுக்கைகள் ஏற்படுத்தப்படும்; மொத்த படுக்கைகள் எண்ணிக்கை 200 ஆக உயரும்.

கொடுங்கையூர் திட்டம் விரிவடைகிறது

கழிவு நீரைப் பயன்படுத்தி, பால்பண்ணையின் தேவைக்கான தீவன வகைகளைப் பயிரிடுவதற்கு கொடுங்கையூரில் சென்னை நகர சபை மேற்கொண்டுள்ள திட்டம் ஆலாபகரமாக இயங்குவதற்கு, மேலும் 600-ஏக்கர் நிலம் வாங்குவதற்கு சென்னை அரசாங்கம அனுமதியளித்துள்ளது. ஏற்கனவே 200 ஏக்கர் நிலம் வாங்கப் பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றியடையுமாறு செய்வதற்கு, சம்பந்தபட்ட இலாகாக்கள் உதவியளிக்குமாறு சர்க்காரால் கோரப் பட்டிருககிறது.

எதிரொலி கேட்கிறது!

சென்னை, டிச. 27—

"இந்திய அரசாங்கம் மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ரூ 5 இடைக்கால நிவாரணம் அளித்திருப்பது ஊழியர்களை அவமானப்படுத்துவதாகும்" என்று அஞ்சல்-தொலைவழி ஊழியர் சங்கத் தலைவர் வி. ஜி. தால்வி சென்னை பெரிய அஞ்சல் நிலையத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"அளிக்கப்பட்டுள்ள இடைக்கால நிவாரணம் போதுமானதல்ல என்று மத்திய அரசாங்கத்திற்கு வலியுறுத்த இந்திய உபகண்டத்தின் எல்லா மாநிலங்களிலும் அஞ்சல் தொலைவழி ஊழியர் ஜனவரி 2-ம் நாளன்று ஊதியம் பெற மறுத்து விடுவார்கள்" என்று, சங்கத்தின் பொதுச்செயலாளர் பி. என். கோஷ் அறிவித்துள்ளார்.

சனவரி 2-ம் தேதியும், 3-ம் தேதியும் 'கண்டனக் கூட்டங்கள்' நடத்தப்படும் என்றும் தெரியவருகிறது.

'இந்தியன் ஏர்லைன்ஸ்' நிறுவனத்தில் கையாடல்

கல்கத்தா, டிச. 30—

சினப் போக்குவரத்து ஏஜெண்டு நெல்சன் நூ என்பவர் மீது நம்பிக்கை மோசம் செய்ததாக அவர்மீது வழக்கு தொடரப் பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான 'ஏர்லைன்ஸ் நிறுவன'த்தில் ரூ. 1½ இலட்சம் அவர் கையாடியதாகக் குற்றம்சாட்டப் பட்டுள்ளது.

வழக்கு ஜனவரி 28-ம் தேதிக்கு தள்ளிப் போடப்பட்டுள்ளது.

'இயற்கை வசதிகள் நிறைய உண்டு'

தமிழ்நாட்டின் வளம்பற்றி சி. பி. ராமசாமி மதிப்பீடு

சென்னை, டிச, 28—

"சென்னை—மாநிலத்தில் மின்சார வசதியை அதிகப்படுத்துவதற்கு இயற்கையாகவே வசதிகள் உள்ளன. நல்ல முறையில் இந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு அமோகமான மின்சார சக்தியை உற்பத்தி செய்யலாம்; அண்டையிலுள்ள மாநிலங்களுக்கும் நாம் மின்சாரம் விற்கலாம். அந்த மாநிலங்கள், 'மின்சாரத்தின் மூலம் கனிப் பொருள்களை வெட்டி எடுப்பதற்கு இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

"மாநிலத்தில் கனிப் பொருள்கள் அதிகமில்லை; மின்சார விற்பனை மூலம் கிடைக்கும் தொகை அதை ஈடு செய்யக்கூடும்" என்று டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர் சென்னை அரசாங்க மின்சார இலாகா அலுவலகத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை—கொழும்பு வழியே மதுரையை ஒரு நிரந்தரமான விமான நிலையமாக்குவதற்கு மத்திய அரசாங்கம் இப்போது தான் முன் வந்துள்ளது என்றும், அதற்கான பரிசீலனை நடைபெற்று வருகிறது என்றும் தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.